VIRUDHUNAGAR MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 29.10.2021

<table>
<tr><th>Date of Council meeting</th><th>Decision Number</th><th>Subject of the Agenda</th><th>Resolution</th></tr>
<tr><td>29.10.2021</td><td>1058</td><td>பொருள் எண் 1<br><br>விருதுநகர் நகராட்சியில் பொது சுகாதாரம் கொரோனா தடுப்பு மற்றும் டெங்கு பணிக்கென தேவையான பொருட்கள் அத்திவாசிய அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோர நகர்மன்ற தனி அலுவலர் அவர்கள் 23.09.2021 ல் அனுமதி அளிக்கப்பட்டது. அதன்பிரகாரம் விலைப்புள்ளிகள் 24.09.2021ல் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th rowspan="2">வ.எண்</th><th rowspan="2">விநியோகம் செய்யப்பட வேண்டிய பொருட்கள் விபரம்</th><th colspan="3">விலைப்புள்ளி அளித்தவர்களின் பெயர் விவரம்</th></tr>
<tr><th>திரு.எ. ராஜ் குமார், 17 அம்மன் கோவில் தெரு, விருதுநகர் (தொகை ரூபாய் )</th><th>திரு. ஸ்ரீமகா கணபதி மெடிக்கல், 131 B - புல்லலக் கோட்டை</th><th>திரு,ராம்சன்,சோப் அன்ட் கெமிக்கல்ஸ் , 19 எ தெற்குரதவீதி. விருதுநகர் (தொகை ரூபாய்)</th></tr>
</table>
</td><td>அலுவலக குறிப்புஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தெரு விருதுநகர் (தொகை ரூபாய்) | |
| 1 | பெரிய போரா சாக்கு – 1000ம் எண்ணம் | **84000.00** | **90000.00** | **100000.00** |
| 2 | பிளிச்சிங்பவுடர் – 5000ம் கிலோ கிராம் | **285000.00** | **325000.00** | **350000.00** |
| 3 | கையுறை – 500 ஜோடி(நைலன்) | **55000.00** | **65000.00** | **70000.00** |
| 4 | முககவசம் – 10000ம் எண்ணம் | **70000.00** | **75000.00** | **80000.00** |

**அலுவலகக்குறிப்பு–** வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ளதிரு.எ. ராஜ் குமார், விருதுநகர் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.4514/2021 /எச்1

| | | | |
|---|---|---|---|
| | 1059 | பொருள் 2<br><br>விருதுநகர் நகராட்சி 36 வார்டு பகுதியிலும் பொது சுகாதார கேடு, பல்வேறு தொற்று நோய்களை ஏற்படுத்தக் கூடிய மற்றும், சாலைகளில் போக்கு வரத்து பொதுமக்களுக்கு அச்சுறுத்தும் வகையில் இடையூராகவும் சுற்றித்திரியும் பன்றிகளை நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு பிடித்து அப்புறப்படுத்திட திரு.ஆ,சிங்காரவேலன், (இந்தியா பன்றி & நாய் பிடிப்பாளர்கள்) 9A தாசில்தார் நகர், அண்ணாநகர் மதுரை , நாள் 09.10.2021 ல் உத்தரவு கோரியுள்ளார் வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>எச்1/2876/2021<br><br>**அலுவலகக்குறிப்பு–** பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி அப்புறப்படுத்திட, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கிதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | அலுவலக குறிப்புஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1060 | பொருள் 3<br>விருதுநகர் நகராட்சியில் பொது சுகாதாரம், கொரோனா தடுப்பு பணிக்கென, வயது 18 க்கு மேற்பட்டவர்களுக்கு மெகா தடுப்பு ஊசி முகாம் மூலம் பொதுமக்களுக்கு தடுப்பு ஊசி செலுத்திட நாள்03–10–2021ல்– 25 (முகாம்) , 10–10–2021 ல்–20 (முகாம்), 23–10–2021 ல்–15(முகாம்), அமைக்கப்பட்டு காலை 7.00 மணியிலிருந்து மாலை 7.00 மணி வரை பணி மேற்கொள்ளப்பட்டுள்ள அதன் களப்பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி மாலை சாப்பாடு கீழ் கண்ட நாட்களில் வழங்கப்பட்டுள்ளது அதற்கான செலவினம் தொகை கீழ் கண்ட விவரப்படி வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது. | அலுவலக குறிப்புரற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது |

| வ.எண் | விநியோகம் செய்யப்பட்ட உணவு வகைகள் விவரம் | நபர்கள் விவரம் | பில் நாள் | தொகை விவரம் |
|---|---|---|---|---|
| 1 | காலை சிற்றுண்டி தண்ணீர் பாட்டில் (1லிட்டர்) மாலை சாப்பாடு | 200 | 03.10.2021 | 26080.00 |
| 2 | காலை சிற்றுண்டி தண்ணீர் பாட்டில்(1லிட்டர்)மாலை சாப்பாடு | 170 | 10.10.2021 | 22168.00 |
| 3 | காலை சிற்றுண்டி தண்ணீர் பாட்டில்(1லிட்டர்)மாலை சாப்பாடு | 150 | 23.10.2021 | 19560.00 |

<u>அலுவலககுறிப்பு</u> . மன்றம் அனுமதி வழங்கலாம்.
ஆணையாளர்மற்றும்தனிஅலுவலர்அவர்களின்
முன்அனுமதி நாள்01.10.2021, 08.10.2021, மற்றும்
22.10.2021 அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்
பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.4518/2021/எச்1

<table>
<tr>
<td></td>
<td>1061</td>
<td>

பொருள் 4

விருதுநகர் நகராட்சியில் பொது சுகாதாரம், கொரோனா தடுப்பு பணிக்கென, வயது 18 க்கு மேற்பட்டவர்களுக்கு மெகா தடுப்பு ஊசி முகாம் மூலம் பொதுமக்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பிரசுரம் பணி மேற்கொள்ள வேண்டி இருப்பதால் ஆ;டடோ. பிரசுரம், குரல்பதிவு , பெண்டிரைவ் புதியது வாங்கி பதிவு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் தொகை ரூ15000/—தில் இப்பணிகள் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று கோரப்பட்டது விலைப்புள்ளிகள் 09.09.2021 ல் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

<table>
<tr><th>வரிசை எண்</th><th>நிறுவனங்கள் பெயர் விவரம்</th><th>விலை விகிதம் தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>M/s. PSR POWER –VIRUDHUNAGAR</td><td>ரூ 14650/—</td></tr>
<tr><td>2</td><td>M/s. Chandira Sound servce-Virudhunagar</td><td>ரூ 16800/—</td></tr>
<tr><td>3</td><td>M/s. P.Ashok, Electrical & Sound service - Virudhunagar</td><td>ரூ 21150/—</td></tr>
</table>

அலுவலககுறிப்பு . மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
நகர்மன்ற தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதையும், வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைவாக விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.PSR POWER – VIRUDHUNAGAR அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br>
இப்பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.4519/2021/எச்1

</td>
<td>அலுவலக குறிப்புஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 1062 | பொருள் 5<br>இந்நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை திட்டத்தில் உள்ள (STP) மாத்தநாயக்கன்பட்டி ரோடு காலேஜ் ரோடு மற்றும் சிவகாசி சாலை கழிவு நீரேற்று நிலையங்கள் உள்ள மின் மோர்ட்டார்கள் மற்றும் சலீஸ் வால்வுகள் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது எனவே அவசர அவசியம் கருதி உடனடியாக பழுது நீக்கம் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.979000/-க்கு குடிநீர் வழங்கல் நிதியில் 2021-22 ம் ஆண்டிற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது<br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்<br>இ2-329/2021 | அனுமதிக்கப்பட்டது |
| | 1063 | பொருள் 6<br>விருதுநகர் நகராட்சியின் பாதாள சாக்கடை திட்டம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உள் வரக்கூடிய மற்றும் வெளியே செல்லக்கூடிய கழிவு நீர் கணக்கீடு அளவு விபரம் பணிக்கென Flow Meter (250 MM Dia-1 No) மாத்துநாயக்கன்பட்டி பாதை மற்றும் சிவகாசி சாலையில் உள்ள பிரதான கழிவு நீர் நிலையத்தில்<br>Flow Meter (350 MM Dia-2 No) அதன் உபகரணங்களுடன் அமைக்கும் பணி நகராட்சி விதிகள் 15-ன் கீழ் திரு.ஆர்.சுந்தர்ராஜ் ஒப்பந்ததாரர் விருதுநகர் என்பவரால் மேற்கொள்ளப்பட்டு பட்டியல் மதிப்பீட்டு தொகை ரூ.757796/- வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்<br>இ2-2602/2021 | பதிவு செய்யப்பட்டது |
| | 1064 | பொருள் 7<br><br>இந்நகராட்சியின் அலுவலகத்தில் இயங்கி வரும் **6**நபர் கொள்ளளவு கொண்ட மின்தூக்கியானது பொருத்தப்பட்டு ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது.ஆகையால் மின்தூக்கிக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் **2021–22**ம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்படுவதற்கு உண்டான செலவினத் தொகை ரூ.**64,900/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–<br><br>மன்றம் அனுமதிக்கலாம்<br><br>கோப்பு எண்.**4533/2021/**இ**1** | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1065 | பொருள் 8<br><br>இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளினை தொழில் மலர் நாளிதழில்களில் விளம்பரம் வெளியிட்டமைக்கு உண்டான செலவினத் தொகைகளுக்கு அவர்களிடமிருந்து கீழ்க்கண்டுள்ளவாறு பில் பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினைகளை சம்பந்தப்பட்ட நாளிதழுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. தினத்தந்தி – தொகை ரூ.15540/– (தி டெய்லி தந்தி,பில் நம்பர்–211003150,நாள்.13.10.2021)<br>2. தினமலர்– தொகை ரூ.16275/– (ஜி.மாரிசுரேஷ்,பில் நம்பர்–242,நாள்.14.10.2021)<br>3. தினகரன் –தொகை ரூ.13,440/– (கால் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், பில் நம்பர்–3300305968,நாள்.14.10.2021)<br>4. தினமணி–தொகைரூ.14,963/(எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன்ஸ் (மதுரை)பி.லிமிடெட், பில் நம்பர்–1207992,நாள்.21.10.2021)<br>5. தீக்கதிர் – தொகை ரூ.14,500/–(தீக்கதிர்,பில்நம்பர்–779,நாள்.14.10.2021)<br>6. மாலை முரசு ரூ.15,750/– (மாலை முரசு,மதுரை–பில்நம்பர்–ஏடி21220917,நாள்.13.10.2021)<br><br>அலுவலகக்குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.3382–2/2021/இ1 | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>1066</td>
<td>

பொருள் 9

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19, பெரிய பள்ளிவாசல் தெருவில் அன்னை சிவகாமிபுரம் நிழற்குடை அருகில் உள்ள சிறுபாலத்தில் மூடுபலகை உடைந்துள்ளதை அகற்றிவிட்டு ஆர்.சி.சி மூடுபலகை அமைப்பதற்கு உண்டான பணியினை **2021–22**ம் ஆண்டின் கீழ் ரூ.**1.20** இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.**1033.** நாள்.**31.08.2021**ல் அனுமதி அளித்துள்ளது.அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள **12.10.2021**ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.வெ.மேனகா–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.57 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.ஜீ.ராஜகுரு–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 1.18 சதவிகிதம் அதிகம்.</td></tr>
</table>

அலுவலகக் குறிப்பு-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள **திருமதி.வெ.மேனகா,ஒப்பந்தக்காரர், விருதுநகர்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

இ1/4027–1/2021

</td>
<td>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>1067</td>
<td>
பொருள் 10<br>
இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20, பெருமாள் கோயில் தெருவில்,மேலரத வீதி செல்லும் சாலையில் உள்ள சிறுபாலத்தில் மூடுபலகை உடைந்துள்ளதை அகற்றிவிட்டு ஆர்.சி.சி மூடுபலகை அமைப்பதற்கு உண்டான பணியினை 2021—22ம் ஆண்டின் கீழ் ரூ.0.30 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.1032. நாள்.31.08.2021ல் அனுமதி அளித்துள்ளது.அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 12.10.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.வெ.மேனகா—விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.52 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.ஜீ.ராஜகுரு—விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 1.13 சதவிகிதம் அதிகம்.</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு-<br>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திருமதி.வெ.மேனகா,ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
இ1/4027—2/2021
</td>
<td>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 1068 | பொருள் 11<br>இந்நகராட்சிப் பகுதியான வி.என்.பி.ஆர் பூங்கா அருகில் (வார்டு எண்.36) அறிவு சார் மையம் மற்றும் ஆய்வு மையம் கட்டிடம் கட்டுவதற்கும் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36ல் அமைந்துள்ள நகராட்சி அலுவலர்கள் குடியிருப்பு பின் பக்கத்தில் புதிய தினசரி சந்தை கட்டிடம் கட்டுவதற்கும் அவ்விடங்களில் மண் பரிசோதனை ஆய்வு செய்யப்படுவதற்கு உண்டான செலவுத் தொகை ரூ.18,000/–னை முதல்வர்,மெப்கோ ஸ்லிங் பொறியியல் கல்லூரி, விருதுநகர் தாலுகா அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு–<br>அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகையினை வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.4096–4/2021/இ1 | அலுவலக குறிப்புஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது |
| | 1069 | பொருள் 12<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.36, இந்நகராட்சிக்குட்பட்ட நகராட்சி அலுவலர்களின் குடியிருப்பு பின்பக்கத்தில் (சர்வே எண்.691/பார்ட்,699/பார்ட், பிளாக் எண்.10,24, வார்டு 18) கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22ம் ஆண்டின் கீழ் புதிய தினசரி சந்தை கட்டிடம் கட்டும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்படுவதற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 18.10.2021ந் தேதியில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது.அதன்படி வரப் பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>1. Terra Amata Design Consortium – ரூ.10,62,000/-<br>2. M Square Architects – ரூ.16,43,764/– | அலுவலக குறிப்புஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>3. JPR Architects and Engineers – ரூ.15,08,040/–<br><br>அலுவலகக் குறிப்பு-<br>வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Terra Amata Design Consortium நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்குவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ1/4096–4/2021</td><td></td></tr>
<tr><td></td><td>1070</td><td>பொருள் 13<br>இந்நகராட்சிப் பகுதியான வார்டு எண்.20,அன்னை சிவகாமிபுரம் தெருவிற்கு வேண்டிய அங்கன்வாடி மையத்தில் கழிப்பறை கட்டும் பணி 2019–20ம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள ரூ.0.32 இலட்சம் மதிப்பீட்டில் ( Corporate Social Responsibility) சமூகத்தின் மீதான தொழிற் நிறுவனங்களின் பொறுப்பு நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்,விருதுநகர் அவர்களின் செயல்முறைகள்.ந.க.எண்.1065/2020/சி2. நாள்.11.09.2021ல் அனுமதி அளித்துள்ளது.அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 08.10.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>எம்/எஸ் தனம் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சௌந்தரபாண்டியன்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 3.63 சதவிகிதம் அதிகம்.</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு-<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>எம்/எஸ் தனம் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்,ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/4296–2/2021</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>1071</td>
<td>பொருள் 14<br>இந்நகராட்சிப் பகுதியான வார்டு எண்.16,தர்காஸ் தெருவிற்கு வேண்டிய அங்கன்வாடி மையத்தில் கழிப்பறை கட்டும் பணி 2019–20ம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள ரூ.0.32 இலட்சம் மதிப்பீட்டில் ( Corporate Social Responsibility) சமூகத்தின் மீதான தொழிற் நிறுவனங்களின் பொறுப்பு நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்,விருதுநகர் அவர்களின் செயல்முறைகள்.ந.க.எண்.1065/2020/சி2. நாள்.11.09.2021ல் அனுமதி அளித்துள்ளது.அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 08.10.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>எம்/எஸ் தனம் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.10 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சௌந்தரபாண்டியன்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 3.63 சதவிகிதம் அதிகம்.</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு-<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள எம்/எஸ் தனம் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்,ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/4296–2/2021</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 1072 | பொருள் 15<br>இந்நகராட்சியில் குடிசை பகுதி மேம்பாட்டு திட்டம் 2008–09 ம் ஆண்டின் கீழ் 676 பயனாளிகளுக்கு மான்யத் தொகையாக ரூ.93,000/–ம் வழங்கப்பட்டது.அதில் விதிமுறைகளை மீறி மான்யத் தொகை ரூ.93,000/–ம் திருமதி.மா.கிருஷ்ணவேணி க/பெ மாரியப்பன் பெற்றுள்ளார். இதற்கு இந்நகராட்சியில் இருந்து மான்யத் தொகை மற்றும் அதற்குண்டான வட்டியுடன் செலுத்தக்கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டது.<br>அதனை எதிர்த்து திருமதி.மா.கிருஷ்ணவேணி என்பவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.75/2021ன் படி வழக்கு தொடுத்துள்ளார். மேற்கண்ட வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.ரவி அவர்கள் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்த வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ4000/–ம்,எதிர்வழக்குரை தாக்கல் செய்த வகைக்கு வழக்குச் செலவு ரூ5000/–ம் ஆக மொத்தம் ரூ9,000/–த்தை நகர்மன்ற வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| | 1073 | பொருள் 16<br>இந்நகராட்சியின் கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு 2021–2022 அலுவல் சார்ந்த சில்லறை செலவினப் பணிகள் உடனுக்குடன் மேற்கொள்ளும் வகையில் நிரந்தர முன் பணம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>நகராட்சி பொறியாளர் பிரிவு இ1 ரூ.2000/–<br>நகர் நல பிரிவு எச்1 ரூ.2000/–<br>நகரமைப்பு பிரிவு எப்1 ரூ.2000/–<br>பொது பிரிவு எ1 ரூ.2000/–<br>அலுவலகக்குறிப்பு–மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.4743–1/2021/இ1 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1074 | பொருள் 17<br><br>விருதுநகர் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அமைவதற்கு திரு.ஆர். பாலசுப்பிரமணியன் என்பவர் தனக்கு சொந்தமான காலியிடத்தில் 5082 ச.அடி நிலம் கொடுத்ததற்கு நிலத்திற்கு நிலம் என்ற அடிப்படையில் மேற்கண்ட 5082 ச.அடி நிலத்தினை நில பரிவர்த்தனை மூலம் ஒப்படைப்பு செய்வதற்கு அதற்கான அனுமதி வழங்கி வரப்பெறப்பட்ட அரசாணை (நிலை)எண்.64, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி-5(1)) துறை நாள்.06.09.2021 மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>கோப்பு எண்.973/2012/எப்1 | பதிவு செய்யப்பட்டது |